மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினர்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்ககாட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

பொதுமக்கள் கருத்துக்கள்:

1.<u>திரு.A.விஜயகுமார், பெரியகுயிலி</u>

என் பெயர் விஜயகுமார். நான் பெரியகுயிலியில் வசிக்கிறேன். இந்த ஊரில் 40 வருடமாக இந்த குவாரி தொழில் நடந்து கொண்டு இருக்கிறது. இந்ததொழிலால் எங்கள் நிலைமை முன்னேறி வருகிறது. லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2. **திருகருப்புசாமி, இடையர்பாளையம்**

என் பெயர் கருப்புசாமி. சரவணன் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. **திரு. K. S. திருஞானசம்பந்தன், தலைமை ஒருங்கிணைப்பாளர், தமிழக நொய்யல் விவசாயிகள் சங்கம்:**

இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மரியாதைக்குரிய மாவட்ட வருவாய் அலுவலர், மற்றும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்களையும் மற்றும் இங்கே வருகை தந்துள்ள விவசாயிகள் மற்றும் குவாரியினுடைய உரிமையாளர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் தமிழக நொய்யல் விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெயர் K.S.திருஞானசம்பந்தன். இன்று இங்கு நடைபெற உள்ள இந்த கருத்து கேட்பு கூட்டத்தின் தற்போது இந்த சரவணன் கல்குவாரியானது சுற்றுசூழலுடைய பாதுகாப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். சமூகத்தினுடைய அடிப்படை அனைத்து உயிர்களினுடைய வாழ்வியல் பாதிக்கப்படக்கூடாது, பொதுமக்களினுடைய வாழ்வியலில் எந்தவிதமான பாதிப்பும் இருக்கக்கூடாது, சிறுகனிம விதிமுறைகள் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். அளவுகோல்கள் (Criteria) சட்ட விதிமுறைகளை பின்பற்றி இருக்கிறதா என்பதை கனிமவளத்துறை அதிகாரிகளும், மாவட்டஅதிகாரிகளும்உன்னிப்பாக கவனித்துப் பார்க்க வேண்டும், அது மட்டுமன்றி நீர் ஓடைகள் இருக்கின்றதா, அதுபோல் குவாரியினுடைய அருகாமையில் இயற்கை சுற்றுசூழல் பாதிக்கும் வண்ணம் ஏதாவது இருக்கின்றதா என்பதையெல்லாம் அளவுகோல்கள் (Criteria) விதிமுறைகளையும், சிறுகனிம விதிமுறைகளையும் மற்றும் SEIAA வினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்பதையும் தெளிவாக கவனிக்கப்படுதல் வேண்டும். இதற்கு மாறாக இருந்தால் முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளமுடியாது, சட்டவிதிகள் என்ன, இந்த நாட்டில் எல்லாமே சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நம்முடைய அரசியல் அமைப்பே இயங்கி கொண்டிருக்கிற சூழ்நிலையில் இன்று சட்டவிதிகளுக்கு மாறாக பல்வேறு தவறுகள் இன்று சுற்றுச்சுழலில் நடக்கின்ற காரணத்தினால் தான் இன்று நம்முடைய தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு கனிமவளங்கள் வெட்டி எடுத்து சொல்லப்படுகின்ற சூழ்நிலையில்,

நம்முடைய தமிழகத்திலிருக்கக்கூடிய மக்களுக்கு போதுமானதாக பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலை இல்லை. அப்படி இருக்கின்ற பொழுது நம்மளுடைய பகுதியிலே நம்மளுடைய மக்களுக்கும் நம்முடைய கோவை மாவட்டத்தில் இருக்கின்ற கனிமவளத்தை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடந்தால் ஐந்து மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யலாம். அதை விட்டுவிட்டு கேரளாவில் அவர்களுடைய இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகிறது, நல்ல காற்றையும், நல்ல நீரையும் அவர்கள் பருகி உயிர் வாழ்கின்றார்கள் அப்படி இருந்தும் அங்கேயே தவறான செயல்கள் நடைபெற்றதினால் தான் அங்கே மிகப்பெரிய நிலச்சரிவு பூகம்பமும் ஏற்பட்டது. இதை எல்லாம் தான் இன்று மிகப்பெரிய அளவிலே இயற்கை சுற்றுசூழல் பாதிக்கப்படுமென்று கோவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடத்தில் ஆறாவது இடத்தில் கோவை மாவட்டம் இருக்கின்றது. அதையெல்லாம் கருத்தில் கொண்டு தான் எங்களுடைய தமிழக நொய்யல் விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் இன்று இதுபோன்ற கருத்துகேட்பு கூட்டத்தில் நாங்கள் எங்கள் கருத்துக்களை தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று இந்த இயற்கை சுற்றுசூழல் கனிமவளங்கள் பல்வேறு சட்டவிதிகளுக்கு மாறாக வெட்டி எடுக்கப்படுவதினால் அருகாமையில் இருக்கக்கூடிய பொதுமக்களுடைய வாழ்வாதாரமே பாதிக்கப்படுகிறது, உயிரினங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது, இவையெல்லாம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருந்தால் தாராளமாக நீங்கள் செய்யுங்கள் அதில் நாங்கள் தலையிடவில்லை, தாராளமாக கொடுங்கள். ஆனால் சட்டத்தை மீறி எதுவும் செய்யக்கூடாது. இதுதான் எங்களுடைய கோட்பாடு. என்ன காரணம் என்றால் நீரோடைகள் மற்றும் இயற்கை சுற்றுசூழல் பாதிக்கப்படுகிறது, ஆங்காங்கே இருக்கக்கூடிய நீர்நிலைகளெல்லாம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக எங்கள் அருகில் உள்ள நொய்யல் நதி கோவை மாவட்டத்தில் மிகப்பெரிய நகரத்தில் இருந்து வருகின்ற நொய்யல் நதி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் இங்கே இருக்கின்ற நீரோடைகளெல்லாம் சரிவான நிலத்திலே வந்து தான் அந்த நொய்யல் நதிக்கே வருகின்றது. அதனுடைய பகுதி பாதிக்கப்படுகின்ற பொழுது இயற்கை சுற்றுசூழல் பாதிக்கப்படும். அந்த நீரோடைகளெல்லாம் இன்று மிகப்பெரிய அளவில் மிகப் பெரிய மாசுபட்ட நீர் வருகின்றது. அதெல்லாம் தான் இன்று மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றது. அந்த சூழ்நிலையில் இந்த குவாரியினுடைய பணிகள் சரியான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு

நடக்கவேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம். இந்த குவாரியினுடைய புல எண் 168ல் தென்கிழக்கில் இரண்டு மூன்று வீடுகள் இருக்கின்றது. புல எண்கள் 178, 168, 176ல் மொத்தம் நான்கு வீடுகள் இவற்றில் உள்ளது. அது மட்டுமன்றி FMBல் பார்த்தால் பிளாட் இருக்கின்றது, அ - பதிவேடு 88/A, 86/Aவில் இருக்கின்றது, 300 மீட்டர் சுற்றளவில் இதெல்லாம் இருக்கின்றது. இது சிறுகனிம விதிகளுக்கு மாறானது, இதை வைத்து எந்தவிதமான அனுமதியும் கொடுக்க முடியாது என்பது சட்ட விதிமுறைகளில் உள்ளது. அது மட்டுமன்றி வடக்கில் 172ல் 95 மீட்டர் வடமேற்கே 162 மீட்டர் அதுபோக வடக்கில் ஐந்து ஆறு வீடுகள் இருக்கின்றது. கூகுள் மேப்பிலும் காட்டுகிறார்கள். இது போன்ற விசயங்கள் திட்ட அறிக்கையில் இல்லை. அது மட்டுமன்றி ஓடை வருகிறது. இதுதான் எங்களுடைய முதல் காரணம். இந்த நீரோடைகளையெல்லாம் அடைத்து குவாரியினுடைய பயன்பாட்டிற்கு பயன்படுத்தினோமானால் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். இந்த நீர் நிலைகள் பாதிக்கப்படும் பொழுது மிகப்பெரிய இயற்கை சுற்றுசூழல் பாதிப்பு ஏற்படும். எனவே இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அது போன்று 200 மீட்டர் சுற்றளவில் பாதிப்பு உள்ளது. அதுபோக ஓடைக்கு 50 மீட்டர் இடைவெளி கிடையாது. மரியாதைக்குரிய சுற்றுசூழல் பொறியாளர் இதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். குளம் இருக்கின்றது. ஏற்கனவே அங்கு குவாரி நடத்திக் கொண்டிருந்த இடத்தில் பசுமை அரண் அமைக்கப்படவில்லை. செடிகள் வைக்கவில்லை அது மட்டுமன்றி லாரிகளில் 85 டன் பயன்படுத்துவதால் நம்முடைய சாலைகள் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கின்றது. அப்போதும் கனிமவளத்தை அதிகமாகப் பயன்படுத்துகின்ற சூழ்நிலைக்கு நாம் ஆளாக்கப்படுகின்றோம். சட்டத்துக்கு மாறாக பயன்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தவறாகப் பயன்படுத்துகிறோம். இது தவறான செயல் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமன்றி அரசு இது போன்ற தவறான சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய மணலை இறக்குமதி செய்ய வேண்டும். இதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அரசுக்கு நீங்கள் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளரும், மாவட்ட வருவாய் அலுவலரும் இது போன்று மிகப்பெரிய அளவில் நம்முடைய தமிழகத்தில் நடைபெறுவதால் நம்முடைய இயற்கை சுற்றுசூழல் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் வெளிநாட்டிலிருந்து மிகக் குறைந்த விலையில் நம்முடைய மக்களுக்கு வழங்குவதற்கு அனைவரும் தயாராக

இருக்கின்றார்கள் அதற்கான பல்வேறு திட்டங்கள் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசுக்கு நீங்கள் கவனத்திற்கு கொண்டு செல்லுதல் வேண்டும். மேலும் அதிகப்படியான மாசுபடுதல் அதிகப்படியான சுற்றுசூழல் பாதிக்கப்படுகிறது. எனவே, இதையெல்லாம் கவனத்தில் கொண்டு இன்று தவறாக நடைபெறுகின்ற குவாரிகளையெல்லாம் அரசே ஏற்று நடத்துகின்ற சூழ்நிலை மிக விரைவில் வர இருக்கின்றது. அதையும் நீங்கள் மரியாதைக்குரிய சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டுக்குழுவிற்கு நீங்கள் பரிந்துரை செய்தல் வேண்டும். அது மட்டுமன்றி இந்த குவாரி அமைகின்ற அனைத்தும் சட்ட விதிகளுக்கு முரணாக இருக்கக் கூடாது. சட்டத்திற்கு உட்பட்டு இருக்கிறதா என்பதை கவனத்தினுள் கொண்டு மரியாதைக்குரிய முகிலன் அவர்கள் சொல்லக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டுள்ள ஆவணங்களை அனைத்தும் ஆவணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

4. **<u>திரு. முகிலன் :</u>**

கோவை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கோவை தெற்கும் இணைந்து நடத்துகின்ற சூலூர் வட்டம் ,இடையர்பாளையம் சரவணன் கல் குவாரியினுடைய பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தினுடைய தலைவர் எங்களுடைய பேரன்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், இதை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் இங்கே பங்கெடுத்துக் கொண்டுள்ள பல்வேறு உழவர் அமைப்புகள் ,சமூக நல இயக்கங்கள், மக்கள் நல இயக்கங்கள் மற்றும் இங்கே கல்குவாரி உரிமையாளர்கள், கல்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்கள் பொதுமக்கள் உட்பட அனைவருக்கும் தமிழ்நாடு சுற்றுசூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக எங்களுடைய வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெயர் முகிலன். தமிழ்நாடு சுற்றுசூழல் பாதுகாப்பு இயக்கத்தினுடைய ஒருங்கிணைப்பாளர். இந்த கல்குவாரி அமைவதற்கு அடிப்படையான விதி என்பது சிறுகனிம சலுகை விதிகள் 1959. இது தான் குவாரிக்கான அளவுகோல்கள் (Criteria) இந்த குவாரி புதிய குவாரி அல்ல இது ஏற்கனவே இயங்கிய குவாரி. ஆனால் ஏற்கனவே இயங்கிய குவாரியாக இருந்தாலும் இந்த

குவாரி 300 மீட்டர் சுற்றளவுக்கு வீடுகள் இருக்கிறதா என்று ஆவணங்கள் வழியாக பார்த்தால் முதலில் இந்த திட்டவடிவமைப்பாளர் இங்கே 300 மீட்டர் சுற்றளவிற்குள் வீடுகள் இல்லையென்று தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமல்ல, மரியாதைக்குரிய கிராம நிர்வாக அலுவலர் 29.01.2024ல் ஒரு சான்று கொடுத்திருக்கிறார்கள். இணைப்பு பக்கம் எண் 103/Aல் அந்த சான்றில் 300 மீட்டர் சுற்றளவிற்குள் குடியிருப்பு பகுதிகள் எதுவும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி இருக்கிறதா என்று அரசினுடைய ஆவணங்களை பார்த்தால் EIA அறிக்கை பக்கம் எண் 88/Aவில் புல எண் 178ல் இரண்டு வீடுகள் இருக்கிறது. அ பதிவேட்டில் இரண்டு வீடுகள் இருப்பதாக சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல EIA அறிக்கையில் பக்கம் எண் 86/Aவில் சாளை என்ற வகையில் வீடு இருப்பதை காட்டி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் plate நம்பர் 1Bல் பக்கம் எண் 97 Aவில் 300 மீட்டர் சுற்றளவில் இத்தனை வீடுகள் இருப்பதை அவர்களே காட்டி உள்ளார்கள். இது மட்டுமல்லாமல் அரசின் கம்ப்யூட்டர் FMBல் சர்வே நம்பர் 168ல் குவாரியினுடைய தென்கிழக்கு பகுதியில் 175வது மீட்டரில் புல எண் 168ல் இந்த வீடு காட்டப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் புல எண் 178 கம்ப்யூட்டர் FMBல் இரண்டு வீடுகள் 75 மீட்டரிலும் 125 மீட்டரிலும் இரண்டு வீடு காட்டப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் குவாரியினுடைய வடக்கு பகுதி புல எண் 176ல் 175 மீட்டரில் ஒரு வீடும் 150 மீட்டர், 160 மீட்டர், 220 மீட்டரில் மூன்று வீட்டு மனைகளும் காட்டப்பட்டிருக்கிறது. இதெல்லாம் ரெவின்யு ரெகார்டில். அரசினுடைய ஆவணங்களான அ பதிவேடு, புல வரைபடம் எல்லாத்திலும் வீடுகள் இருக்கிறது காட்டப்பட்டிருக்கிறது. கிராம வரைபடம் முழுமையாக இல்லாததினால் அது பற்றி சொல்லவில்லை. வீடுகள் காட்டப்பட்டிருப்பது தெளிவாக காட்டப்பட்டிருக்கிறது. கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து போட்டு இருக்கிறார்கள். ஆனால் கிராம நிர்வாக அலுவலரே 300 மீட்டரில் வீடு இல்லை என்று கொடுக்கிறார்கள். அ பதிவேட்டில் அவர்கள் தான் கையெழுத்து போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் சான்று கொடுக்கும் போது வீடு இல்லை என்று ஒரு மோசடியான ஆவணம், அரசு அதிகாரிகளே இருக்கின்ற வீட்டை மறைத்து கொடுத்து இருக்கிறார்களா அது மட்டுமில்லாமல் வருவாய்த்துறை தெளிவாக கொடுத்து உள்ளது. UDR மேப்பிலும், FMB, அ பதிவேடுகளில் வீடுகள் என்று காட்டி இருந்தாலே அந்த வீடு இடிந்து போயிருந்தாலோ, அல்லது சிதிலமடைந்திருந்ததாலோ, அப்புறப்படுத்தி இருந்தாலோ அது வீடு

என்றே பொருள்படும் என்று தகவல் உரிமை சட்டத்தில் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். எனவே இவர்களுடைய ரெவின்யூ ரெக்கார்டில் காட்டப்பட்ட வீடுகள் ஐந்து வீடுகள், மூன்று வீட்டு மனைகள் எனவே இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது அதே போல தற்காலிக வீடுகள் என்று நிறைய வீடுகள் இருக்கிறது. அதனால் தற்காலிக குடியிருப்பு, நிரந்திர குடியிருப்பு, தொழிலாளர் குடியிருப்பு இருக்கக்கூடாது என்று உள்ளது. ஆனால் அவர்கள் கொடுத்துள்ள Power Point ப்ரெசென்ட்டேஷனில் குவாரியை சுற்றி கிட்டத்தட்ட 30 வீடுகள் காட்டி உள்ளார்கள். நாங்கள் கூகுளில் பார்த்த போது அட்சரேகை, தீர்க்கரேகை அடிப்படையில் கூகுள் படத்தில் குவாரியினுடைய வெளி முனை பகுதியிலிருந்து பார்க்கும் பொழுது குவாரிக்கு வடக்கு பகுதியில் 172 மீட்டரில், 99 மீட்டரில் வீடு இருக்கிறது. வட மேற்கு பகுதியில் 162 மீட்டர், 113 மீட்டர் தூரத்தில் வீடு இருக்கிறது. 183 மீட்டரில் அங்காளம்மன் கோவில் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் மேற்கு பகுதியில் 131 மீட்டர், 279 மீட்டர், 246 மீட்டர், 264 மீட்டரில் வீடுகள் இருக்கிறது. வடகிழக்கு பகுதியில் 144 மீட்டரில் வீடு இருக்கிறது, தென் கிழக்கு பகுதியில் 196 மீட்டரில் வீடு இருக்கிறது. தென் மேற்கு பகுதியில் 252 மீட்டர், 259 மீட்டர் என்று கூகுள் படங்களிலே அட்சரேகை, தீர்க்கரேகை அடிப்படையில் இத்தனை வீடுகள் இருப்பது காட்டப்பட்டுள்ளது. ஒரு வீடு இருந்தாலே அனுமதி கொடுக்க முடியாது. ஆனால் கிட்டத்தட்ட 20க்கும் மேற்பட்ட வீடுகள், தற்காலிக, நிரந்தர குடியிருப்புகள் காட்டப்பட்டிருக்கிறது. எனவே இந்த குவாரிக்கு சட்ட அடிப்படையில் அனுமதி கொடுக்க முடியாது. அடுத்ததாக ஓடை, ஓடையை பொறுத்தவரை வருவாய்த்துறை நிலை ஆவணம் ஆணை 26 பிரிவு 15ல் நிலவியல் பாதை, நிலவியல் கால்வாய் என குறிப்பிடப்படும் இவை பட்டா நிலத்தில் இருப்பினும் அவை அரசுக்கு சொந்தமாகும். அந்த ஓடைக்கு 50 மீட்டர் இடைவெளி விட வேண்டுமென்று சிறுகனிம சலுகை விதிகளில் தெளிவாக சொல்கிறார்கள். அதன் அடிப்படையில் இவர்கள் சொல்லும் சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் EIA அறிக்கையில் பக்கம் 4ல் இந்த ஓடைக்கு 50 மீட்டர் பாதுகாப்பு தெற்கு பகுதியில் உள்ளதாக சொல்லி இருக்கிறார்கள் புல வரைபடத்தில் புல எண் 171/2ல் ஓடை போகிறது. ஓடை போகக்கூடிய மேற்கு புறபகுதியினுடைய புலத்தில் 59 மீட்டர் மட்டுமே இடைவெளி. 59 மீட்டரில் கீழ் முனையிலிருந்து 10வது மீட்டரில் ஓடை போகிறது. அது மட்டுமல்ல மேலிருந்து 20.4 மீட்டரில் குவாரிக்கு அனுமதி கொடுத்து உள்ளார்கள். இந்த ஓடையை பொறுத்தவரை வெறும் 25 மீட்டர்

மட்டுமே இருக்கிறது. ஆனால் 50 மீட்டர் இடைவெளி கொடுத்து இந்த குவாரி இயங்குகிறது என்று திட்ட வடிவமைப்பாளர் சொல்லி இருக்கிறார்கள். இது சட்டப்படி போலியான மோசடியான ஆவணங்களை தயாரித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல இந்த குவாரி புலத்தினுடைய புல எண் 164 என்ற தென்கிழக்கு பகுதியில் ஒரு குளம் இருக்கிறது. புல எண் 171 வழியாக போகும் ஓடையும் அங்கு தான் போகிறது. அந்த புலத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு ஏந்தல், கண்மாய், குளம், ஏரி செக்டேம், அணைகள், தடுப்பணைகள் போன்ற நீர் தேக்கும் இடங்கள் இருந்தால் 500 மீட்டர் இடைவெளி விட வேண்டுமென்று சட்டமும் சொல்கிறது, உயர்நீதிமன்ற தீர்ப்புகளும் இருக்கிறது. ஆனால் புல எண் 164ல் இந்த குளத்திலிருந்து வெறும் 200 மீட்டர் இடைவெளியில் அந்த கல்குவாரி இருக்கிறது. எனவே சட்டப்படி அந்த குவாரிக்கு அனுமதி தர முடியாது, தரக்கூடாது. தமிழ் EIA அறிக்கை பக்கம் எண் 5ல் தினசரி 80 டன் கல் வெட்டி எடுப்பார்கள் அதை 7 லாரிகளில் அதாவது 33 டன் (12 $m^3$) கொண்டு போவதாக சொல்லியிருக்கிறார்கள். சட்டப்படி கிராம சாலைகளில் 10 டன் எடை மட்டுமே போக முடியும். ஆனால் இவர்கள் சட்ட விரோதமாக 33 டன் கொண்டு போவதாக சொல்கிறார்கள். எனவே, இந்த Mining Plan ஏற்கனவே இவர்கள் சுரங்கத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருந்தாலும் இது சட்ட விரோதமாக இருப்பதால், நீதிமன்றத்திற்கோ, சட்டப்படியோ செல்லாது. இந்த திட்டத்திற்கு ஏற்கனவே அனுமதி கொடுத்திருந்தால் சட்டப்படி இது செல்லாது. எனவே, இந்த குவாரிக்கு அனுமதி தரக்கூடாது அதுமட்டுமில்லாமல், எனக்கு முன்னால் பேசிய நண்பர் இங்கு 5000 மரங்கள் நடுவதற்கு திட்டம் இருக்கிறதென்று சொன்னார். அதை நாங்கள் வரவேற்கின்றோம். இந்த பகுதியிலுள்ள 100 குவாரிகளும் 1000 மரங்கள் வைத்தால் இந்த பகுதியினுடைய தன்மையே மாறி இருக்கும். இந்த குவாரி 2023 வரை இயங்கி இருக்கிறது. இப்போது புதுப்பிக்க வந்திருக்கிறார்கள். தமிழ் சுருக்க அறிக்கை பக்கம் எண்.5ல் இதுவரை ஒரு மரங்களை கூட வைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இனிமேல் 35 ஹெக்டரில் வைப்போம் என்கிறார்கள். ஏற்கனவே இருந்த போது இந்த உறுதிமொழி என்ன ஆயிற்று? சமூகத்தில் அரசு மக்கள் சொத்தை எடுத்து பல கோடி மரங்கள் நடுகிறது. ஆனால் இவர்கள் மக்களுடைய சொத்தான கனிமங்களை எடுக்கிறார்கள். இது அவர்களின் நிலத்தில் தான் நிலத்தில் 6 அடி மட்டும் தான் சொந்தம் இவர்கள் அதற்கு கீழே உள்ளது எல்லாம் சமூக சொத்து இவர்கள் சமூக சொத்தை எடுக்கிறார்கள் அதற்காகத்

தான் குத்தகை விடுகிறார்கள் குவாரி உரிமையாளர் அல்ல குவாரி குத்தகைதாரர். பசுமை அரண் என்ன ஆனது? 6 அடிக்கு கீழ் இருப்பதெல்லாம் சமூக சொத்து. ஆனால் சொன்ன விதிப்படி இவர்கள் மரங்களை நடவில்லை. அதனால் இந்தப் பகுதி சுற்றுசூழல் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான அபாயம் இருக்கிறது. ஏற்கனவே மதுக்கரை பகுதியில் நில அதிர்வு ஏற்பட்ட வரலாறு உண்டு அதுமட்டுமல்ல தமிழகத்தில் இஸ்ரோ நிறுவனம் ஆய்வு செய்த 6 மாவட்டங்களில் இந்தியாவில் 147 இடம், வயநாடு போன்ற நிலச்சரிவு ஏற்படக்கூடிய 6 மாவட்டங்களில் நம்முடைய கோவை மாவட்டத்தையும் சேர்த்து இருக்கிறார்கள். இது எல்லாம் ஒரு அடிப்படைக் காரணம். இதை செய்யாமல் இருக்கிறார்கள். சட்டப்படி இந்த நிறுவனம் சட்டப்படி இயங்கியதில்லை என்பது தான் யதார்த்த உண்மை. சர்க்கரை என்று காகிதத்தில் எழுதி வைத்தால் இனிக்காது. சட்டப்படி செய்கிறோம் என்று சொல்லிவிட்டு செய்யாமலிருந்தால் அது சட்டத்திற்கு விரோதமானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கு அடுத்தபடியாக இவர்கள் மரங்கள் நடாததால் காற்று மாசுபாடு ஏற்பட்டு இன்று குழந்தைக்கு கூட சர்க்கரை நோய் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக மலட்டுத்தன்மை ஏற்பட்டு CBSE டெல்லியிலிருந்து அனைத்து CBSE பள்ளிகளில் குழந்தைகளுக்கு சர்க்கரை நோய் ஆய்வு செய்ய கடந்த மே 15ம் தேதி உத்தரவு போட்டிருக்கிறது. தொழில் வேண்டும் தான் நம்முடைய எதிர்கால குலக்கொழுந்துகளை அழித்துவிட்டு தொழில் தொடங்குவது அல்ல. தொழில் சட்ட விரோதமாக செய்யும் போது தான் இவ்வளவு பிரச்னைகள் வருகிறது. வரும் வழியில் நாங்கள் பார்த்த 30, 40 லாரிகளில் ஒரு லாரி கூட தார்பாய் போட்டு கொண்டு போகவில்லை. அது அங்கிருக்கும் பொதுமக்களுக்கு மாசு ஏற்படுத்தும். இப்படி அனைத்து வகையிலும் காற்று மாசுபாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே இப்பகுதியிலுள்ள இன்ஜினியரிங் அஸோஸியேஷன் குவாரிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். தி.மு.க அரசினுடைய தேர்தல் அறிக்கையில் 200வது பாயிண்டில் குவாரிகளை அரசே ஏற்று நடத்தும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த கருத்து கேட்பு கூட்டத்தின் வாயிலாக அதையும் இந்த அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். டாஸ்மாக்கை அரசே ஏற்று நடத்துவது போல குவாரிகளை அரசே ஏற்று நடத்தும் பொழுது பல லட்சக்கணக்கான மக்களுக்கு

பாதுகாப்பும் பல லட்சக்கணக்கான கோடி ரூபாய் அரசினுடைய கஜானாவிற்கு சிந்தாமல் சிதறாமல் வந்து சேரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதை எங்களை போன்ற விவசாய சங்கங்கள் மட்டும் அல்லாமல், சூழலியல் அமைப்புகள், பொறியாளர் சங்கம் அந்த கோரிக்கை வைத்து போராடி கொண்டு இருக்கிறார்கள். அடுத்தபடியாக இங்கே ஆற்று மணலும் வேண்டாம் செயற்கையான M-SAND ம் வேண்டாம் கற்களை வெட்டி எடுப்பது நம்முடைய கட்டிடத்தின் அடித்தளத்திற்கும் சாலைகள் அமைப்பதற்கும் மட்டும் வெட்டி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். வெளிநாட்டு இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்யவேண்டும் என்று கோரிக்கையை மட்டும் நாங்கள் வைக்கவில்லை. இதற்கான உத்தரவை தமிழக அரசு எங்களை போன்றோரிடம் கருத்து கேட்டு இதற்கான அரசாணை 2017லேயே தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. மாதம் 5 இலட்சம் மெட்ரிக் டன் என்று 2021 ல் தி.மு.க. அரசு பதவியேற்ற பிறகு ஐந்து அரசாணைகள் போடப்பட்டது. நாங்கள் சொல்வது தமிழ்நாட்டின் மணல் தேவை ஒரு நாளுக்கு 21,000 லாரி லோடு தான், அந்த 21,000 லாரி லோடை அடிக்கடி நில அதிர்வு ஏற்பட்டு மணலை எடுக்க சொல்கிற தென்கிழக்கு ஆசிய நாடான மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் அவர்கள் தங்கள் ஆறுகளிலிருந்து தங்க கூடிய மணலை இலவசமாக எடுத்து செல்ல சொல்கிறார்கள் அந்த மணலை கொண்டு வந்து பயன்படுத்த வேண்டும் இதை எங்களை போன்ற விவசாய சங்கங்கள் மட்டும் அல்லாமல், சுழலியல் அமைப்புகள், பொறியாளர் சங்கம் அந்த கோரிக்கை வைத்து போராடி கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இங்கு வழங்கப்படும் M-சாண்டில் 50% கழிவுகளை கலப்பதாக பொறியாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே தரமான வெளிநாட்டு இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்ய வேண்டும். இங்கு கட்டக்கூடிய வீடுகள் 80 ஆண்டுகள் தரமானதாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கிறோம். இந்த குவாரிக்கு கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த குவாரியினுடைய கிழக்கு புறபகுதியில் எந்த அனுமதியும் இல்லாமல் கல்குவாரி வெட்டப்பட்டிருக்கிறது. அது சட்டவிரோதம் ஏற்கனவே குவாரி இருந்திருந்தால் 10 மீட்டர் இடைவெளி விட்டுத்தான் குவாரி பணி செய்ய வேண்டும். 500 மீட்டர் சுற்றளவு இடத்தில் இந்த குவாரி இல்லை. இந்த குவாரி சட்டவிரோதமாக பல கோடி மதிப்பிலான கனிமங்களை வெட்டி எடுத்திருக்கிறார்கள். இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு சட்டவிரோதமாக

வெட்டி எடுக்கப்பட்ட கனிமங்களுக்கு சட்டவிரோதமான வெடிமருந்து என்று சொல்லக்கூடிய வெடிப்பொருளை எங்கிருந்து கொண்டு வந்தார்கள்? யாரிடம் சட்ட விரோதமாக பெற்றார்கள்? என்பதையும் கண்டறிந்து அதிகமாக வெட்டி எடுத்ததற்கு அபராதமும் அதற்காக IPC முன்னால் சட்டம் 379ன் படி அபராதம் விதிப்பதோடு திருட்டு வழக்கு பதிவு செய்ய வேண்டும். சட்ட விரோதமாக கொண்டு வந்ததற்காக Explosives Act என்பதையும் பதிவு செய்ய வேண்டும் என்பதையும் என்று கூறி இந்த இடையார்பாளையத்தில் இருக்கக்கூடிய சரவணன் கல்குவாரிக்கு சட்டபடியான வகையில் 300 மீட்டர் தூரத்தில் 5க்கும் மேற்பட்ட அரசு ஆவணங்களிலேயே வீடுகளும், வீட்டுமனைகளும் இருப்பது அரசு ஆணங்களான புல வரைபடம் மற்றும் அ-பதிவேடுகளில் காட்டப்பட்டிருக்கிறதாலும், 300 மீட்டர் சுற்றளவிற்குள் 30க்கும் மேற்பட்ட தற்காலிக, நிரந்தர தொழிலாளர் குடியிருப்பு இருப்பதாலும், புல எண் 171/2ல் செல்லக் கூடிய ஓடைக்கு 50 மீட்டர் இடைவெளிக்குப் பதில் வெறும் 25 மீட்டர் இடைவெளி தான் இருப்பதாலும், புல எண் 164 புலத்திலிருக்கக்கூடிய குளத்திற்கு 500 மீட்டர் இடைவெளிக்குப்பதில் 200 மீட்டர் மட்டும் இடைவெளி இருப்பதாலும், இங்கே முறையாக பசுமை அரண் அமைக்காததாலும் குவாரி இயங்க தொடங்குவதற்கு முன்பே இணை நிலத்தில் சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டி எடுத்திருப்பதற்காகவும் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது, கொடுத்தால் அது சட்டவிரோதம் என்பதை சொல்லி மரியாதைக்குரிய தமிழ்நாடு அரசு தேர்வாணையின் மூலம் தேர்ச்சி பெற்று வந்த இந்த கிராமத்தைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் கடந்த ஆண்டு 2024 ஜனவரியில் பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர் பொய்யான ஆவணத்தை அதாவது 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள் இல்லை என்று ஆவணங்களை கொடுத்திருக்கிறார். அவர் மீது நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கிறோம். இதற்கு அவரை பணி மாறுதல் மட்டுமல்ல பணி நீக்கம் செய்யலாம். இப்படி நாமக்கல் மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யபட்டிருக்கிறது. நான்கு கிராம நிர்வாக அலுவலர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நீதிமன்றத்திற்கு சென்று நாங்கள் இந்த பொய்யான ஆவணங்கள் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை எடுப்போம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு சரவணன் கல் குவாரிக்கு சட்ட அடிப்படையில் இந்த குவாரி இயங்க தகுதி அற்றது சட்ட

விதிமுறைகள், அரசின் விதிமுறைகள், சிறு கனிம விதிகள், மின்சார சட்ட விதிகள், அது போல பல்வேறு நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தையும் மீறி இருப்பதால் இதற்கு அனுமதி தரக்கூடாது, தரக்கூடாது எனக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

5. **<u>திரு. விவேக், போகம்பட்டி</u>** :

நான் சரவணன் குவாரிக்கு பக்கத்து தோட்டம் தான். கல்குவாரி உடைப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எந்த பிரச்சனையும் இல்லை. அதனால் அவர் கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுக்கலாம்.

6. **<u>திரு.பாலகுரு :</u>**

என் பெயர் பாலகுரு. நான் சரவணன் குவாரிக்கு பக்கத்து தோட்டத்தில் இருக்கிறேன். அவருக்கு கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

7. **<u>திரு. கிஷோர், இடையர்பாளையம் :</u>**

சரவணன் குவாரிக்கு பக்கத்து தோட்டம். அவர் பாறைக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

8. **<u>திரு. கவி ஆனந்த், இடையர்பாளையம் :</u>**

என் பெயர் கவி ஆனந்த். இடையார்பாளையத்திலிருந்து வருகிறேன். சரவணன் கல்குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை..

9. **<u>திரு. கிரண் கார்த்திக், இடையர்பாளையம் :</u>**

வணக்கம். என் பெயர் கிரண் கார்த்திக். இடையார்பாளையத்திலிருந்து வருகிறேன். சரவணன் அண்ணன் கல்குவாரிக்கு பக்கத்தில் தான் வேலை செய்கிறேன். அவருக்கு கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர் கல் குவாரிக்கு அனுமதி அளிப்பது மூலமாக எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சுற்றிஇருக்கின்ற குவாரி மற்றும் கிரஷர் நம்பி இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற மாதிரி அமையும். அதனால் அவருக்கு அனுமதி அளிப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நன்றி.

10. **திரு.மாரிமுத்து, போகம்பட்டி :**

என் பெயர் மாரிமுத்து. நான் போகம்பட்டியிலிருந்து வருகிறேன். சரவணன் கல் குவாரிக்கு அனுமதி அளிப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

11. **திரு. மாணிக்கராஜ், போகம்பட்டி :**

என் பெயர் மாணிக்கராஜ். திரு.சரவணன் அவர்கள் வீடு பக்கத்தில் தான் எங்கள் தோட்டம் அவருக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

12. **திரு. மணிகண்டன், பொன்னாங்காணி** :

என் பெயர் மணிகண்டன். சரவணன் அவர்கள் தோட்டம் பக்கத்தில் தான் எங்கள் தோட்டம் இருக்கிறது. அவர் இதற்கு முன்னால் கல் உடைத்துக் கொண்டிருந்தபோதே எங்களுக்கு எந்த இடையூறும் வந்தது இல்லை. அதே மாதிரி அரசு விதிப்படி வெடிவைத்து எல்லாம் செய்தார். புகை வருவது போன்ற எந்த பிரச்சனையும் எங்களுக்கு வந்தது இல்லை. மீண்டும் லைசென்ஸ் கொடுக்கும் போதும் அதே போல் நடந்து கொள்வார், பக்கத்தில் இருப்பவர்களுக்கும் எந்த இடைஞ்சலும் தருவதில்லை. அதனால் அவருக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

13. **திரு. நாகராஜ், இடையர்பாளையம் :**

சரவணன் இடையார்பாளையம் கல் குழிக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை.

14. **திரு.வாசுதேவன், பொன்னாங்காணி :**

என் பெயர் வாசுதேவன். சரவணன் அவர்களின் கல் குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எந்தவிதமான கருத்துக்களும் இல்லை .

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

பெயர் கொடுத்தவர்கள் அனைவர் பெயரும் வாசிக்கப்பட்டு விட்டது. வேறு எவரேனும் கருத்துக்கள் சொல்ல நினைத்ததால் தங்கள் பெயர், ஊரை சொல்லி தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம்.

15.**திரு. இன்பசேகரன், NGO**

என் பெயர் இன்பசேகரன். NGOவாக இருக்கிறேன். சொந்த ஊர் அரக்கோணம். இந்த கல் குவாரியினாலே சின்ன சின்ன இடர்பாடுகள் இருந்தாலும் பெரும் அளவில் தொழில் முன்னேற்றம் மற்றும் அந்த ஊரை சுற்றி உள்ள பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பல முன்னேற்றங்கள் ஏற்படும் என்று சொல்லிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி.

16. **திரு. உதயகுமார் :**

என் பெயர் உதயகுமார். இடையார்பாளையத்தில் இருக்கிறோம். சரவணன் அவர்களுக்கு பக்கத்தில் தான் இருக்கிறோம். ஒவ்வொரு இடத்திலும் முறையான அனுமதி வாங்கி தான் குவாரி நடத்திக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமில்லாமல் நிறைய மரக்கன்றுகள் நட்டு அதை முறையாக பர்ாமரித்துக் கொண்டும் இருக்கிறோம். அது மட்டுமில்லாமல் இந்த குவாரி வருவதினால் நிறைய வேலை வாய்ப்பு உருவாவதோடு கனிம வளங்கள் கிடைப்பதிலுள்ள தட்டுப்பாட்டிற்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதால் இந்த குவாரி வருவதை வரவேற்கிறோம். விரைவில் இதற்கு ஒப்புதல் தந்து உதவுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**: வேறு எவரேனும் கருத்துக்களை பதிவு செய்ய நினைத்தால் எழுந்து நிற்கவும். அனைவரும் கருத்துக்களை பதிவு செய்து விட்டதால் இக்கருத்துக் கேட்பு கூட்டத்தை இத்துடன் நிறைவு செய்து கொள்ளலாம். கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொதுமக்கள் மற்றும் காவல்துறை நண்பர்கள்அனைவருக்கும் மாவட்டநிர்வாகம் மற்றும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேற்கூறியபொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

**மாவட்ட வருவாய் அலுவலர்/**
**சீனியர் மண்டல மேலாளர்**
**தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

மனுக்களின் எண்ணிக்கை : ஒன்று (1)

மேற்கூறியபொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

**மாவட்ட வருவாய் அலுவலர்/**
**சீனியர் மண்டல மேலாளர்**
**தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**